Schul- und familienergänzende

# Betreuungsangebote

## பராமரிப்பு வாய்ப்புகளின் விபரம்

**பராமரிப்பு முறை 1: வருகை தரும் நேரம்**
6.45 தொடக்கம் 08.10 மணி வரை
ஒரு பராமரிப்பாளர் அங்கு பிரசன்னமாயிருந்து மாணவ மாணவியரை பொறுப்பேற்பார். வீட்டிலிருந்து கொண்டு வந்த காலையுணவை உண்பதற்கு, பாடசாலைவீட்டுவேலையை சுயமாக செய்வதற்கு, வாசிப்பதற்கு அல்லது விளையாடுவதற்கு அங்கு வாய்ப்புள்ளது.

**பராமரிப்பு முறை 2: *மதிய உணவும் பராமரிப்பும்***
11.40 தொடக்கம் 13.20 மணி வரை
மாணவ மாணவிகளுக்கு சத்துள்ள ஒரு மதிய உணவு வழங்கப்படும். அதன்பின்பு அனைவரும் இணைந்து ஒழுங்குபடுத்தும் வேலை இடம்பெறும். மீண்டும் பிற்பகல் பாடசாலை தொடங்கும் வரை பராமரிப்பு இடம்பெறும். பிற்பகல் பாடசாலை இல்லாத பிள்ளைகளுக்கு 13.20 மணிக்கு பராமரிப்பு முறை 2 முடிவடையும். அவர்கள் மீண்டும் வீட்டுக்கு செல்வார்கள் அல்லது பராமரிப்பு முறை 3 க்கு வருகை தருவார்கள்.

**பராமரிப்பு முறை 3: *பிற்பகல் ஆரம்பத்தில் பராமரித்தல்***
13.20 தொடக்கம் 14.55 மணி வரை
மாணவ மாணவிகள் பராமரிப்பிடத்திலேயே (மேற்பார்வை இல்லாமல்) சுயமாகவே தமது பாடசாலைவீட்டுவேலையை செய்ய முடியும். அதன்பின் விளையாட்டு வசதிகள் உண்டு. இந்த பராமரிப்பு முறை **3a,** பிற்பகல் பாடசாலைநேர இடைவேளையுடன் முடிவுறும்.

**பராமரிப்பு முறை 4: *இடைநேர உணவும் பராமரிப்பும்***
14.55 தொடக்கம் 18.00 மணி வரை
மாணவ மாணவிகளுக்கு இடைநேர உணவு (Zobig) வழங்கப்படும். அதன் பின்பு பராமரிப்பிடத்தில் (மேற்பார்வையில்லாமல்) அவர்கள் தமது வீட்டுவேலையை சுயமாக செய்வார்கள். மற்றைய மாணவ மாணவிகளுக்கும் வீட்டுவேலையை செய்து முடித்த மாணவ மாணவிகளுக்கும் விளையாட்டு வசதிகள் உண்டு. மாலையாகியதும் மாணவ மாணவிகள் தத்தமது ஒழுங்கு வசதிக்கேற்ப வீடு செல்வார்கள். இந்த வீடு செல்லும் நேரமானது நாளாந்த கட்டமைப்பு முடிவடைகின்ற 18.00 மணிவரை நடைபெறும்.

**பராமரிப்பு முறை U_a: *ஆரம்பப்பாடசாலையின் பாடசாலைவீட்டுவேலையை வீட்டுவேலைக்கழகத்தில் (Ufzgiclub) செய்தல் (1.-4. வகுப்பு)***
திங்கள், செவ்வாய், வியாழக்கிழமைகளில் 13.20 தொடக்கம் 14.05 மணி வரை
வீட்டுவேலைக்கழகத்தில் மேற்பார்வையின் கீழ் மாணவ மாணவிகள் தமது பாடசாலைவீட்டுவேலையை சுயமாக செய்வார்கள். பிள்ளைகள் தமது வீட்டுவேலையை செய்து முடிப்பதற்கான அமைதியான சூழலை பராமரிப்பாளர்கள் ஏற்படுத்தி கொடுப்பார்கள். வீட்டுவேலை செய்து முடிக்கப்பட்டுவிட்டதா என அவர்கள் கண்காணிப்பார்களேயன்றி, தெரியாதவற்றை கற்பிப்பதற்கும் பாடவேலைகளை திருத்துவதற்கும் அவர்கள் பொறுப்பல்ல. உதவுவதற்கு ஆசிரியர் ஒருவர் அவ்விடத்தில் இருப்பார். பாடசாலைவீட்டுவேலை முடிவடைந்ததும் பிள்ளைகள் பராமரிப்பு முறை 3 வுக்கு மாறுவார்கள் அல்லது வீட்டுக்கு செல்வார்கள்.

**பராமரிப்பு முறை U_b: *வீட்டுவேலைக்கழகத்தில் ஆரம்பப்பாடசாலைக்கான பாடசாலைவீட்டுவேலை (1.-4. வகுப்பு)***
திங்கள், செவ்வாய், வியாழக்கிழமைகளில் 15.15 தொடக்கம் 16.00 மணி வரை. **U_a** யின் விளக்கம்.
பாடசாலைவீட்டுவேலை முடிவடைந்ததும் பிள்ளைகள் பராமரிப்பு முறை 4 வுக்கு மாறுவார்கள் அல்லது வீட்டுக்கு செல்வார்கள்.

**பராமரிப்பு முறை U_c: *வீட்டுவேலைக்கழகத்தில் ஆரம்பப்பாடசாலைக்கான பாடசாலைவீட்டுவேலை (1.-4. வகுப்பு)***
திங்கள், செவ்வாய், வியாழக்கிழமைகளில் 16.05 தொடக்கம் 16.50 மணி வரை. **U_a** யின் விளக்கம்.

**பராமரிப்பு முறை L_Primar: *உயர்வகுப்புக்கான கற்றல் நேரம் (5./6. வகுப்பு)***
திங்கள் 16.10 தொடக்கம் 17.00 மணி வரை. செவ்வாய், வியாழக்கிழமைகளில் 07.20 தொடக்கம் 08.05 மணி வரை.

உயர்வகுப்பு மாணவ மாணவிகள் கற்றல் நேரத்தில் தமது பாடசாலை வீட்டுவேலையை சுயமாகச் செய்வர். பிள்ளைகள் தமது வீட்டுவேலையை செய்து முடிப்பதற்கான அமைதியான சூழலை பராமரிப்பாளர்கள் ஏற்படுத்தி கொடுப்பார்கள். பாடசாலைவீட்டுவேலை முடிவடைந்ததும் பிள்ளைகள் பராமரிப்பு முறை 4 வுக்கு மாறுவார்கள் அல்லது வீட்டுக்கு செல்வார்கள்.

**பராமரிப்பு முறை L_Sek: (Sekundarschule)** ஒரு பாடம் இணர்டு முறை ஒரு வாரம். பள்ளி நேரம் பார்த்து நடைபெறும்.